
**நூறு ஏக்கருக்கு இரண்டே வேலையாள்..இதோ, ஓர் அதிசய இயற்கைப் பண்ணை!**




காவேரி ராஜபுரம்.. அரக்கோணம் அருகே உள்ளடங்கி இருக்கும். திருவள்ளூர் மாவட்ட கிராமம். சில பல ஆண்டுகளுக்கு முன்பு கல்லும், கரடுமாக இருந்த ஊரில், இப்போது திரும்பிய பக்கமெல்லாம் மாந்தோப்புகள் விரிந்து கிடக்கின்றன. இந்தப் பருவத்தில் தமிழகத்தில் மாம்பழ விளைச்சல் பெரிய அளவு இல்லை. அதே கதைதான் இங்குள்ள பெரும்பாலான மாந்தோட்டங்களிலும். ஆனால், 'லியோ இயற்கை வேளாண் பண்ணையில் மட்டும் காய்த்துக் குலுங்கிக் கொண்டிருக்கின்றன. காரணம்.. முழுக்க முழுக்க இயற்கை முறையிலேயே நான் பராமரிப்பதுதான் என்று நம்பிக்கை பொங்கச் சொல்கிறார், பண்ணைக்குச் சொந்தக்காரர்களில் ஒருவரான பாரதி!

தோட்டத்திற்குள் நடை போட்டால்.. அடுத்தடுத்து ஆச்சரியங்கள் நம்மைத் தாக்கி, விழிகளை விரிய வைக்கின்றன. ஆம்.. பண்ணகைக்குள் நுழைபவர்களை உள்ளே இருப்பவர்களுக்கு தெரிவிப்பதற்காக அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் ஒளிப்படக் கருவிகள் (குளோஸ்டு சர்க்யூட் கேமராக்கள்) வேலியிருக்கும் முள்செடிகளை கவாத்து செய்து கொண்டிருக்கும்

ராஜஸ்தான் ஒட்டகம்.மாம்பழங்களைச் சுமந்து செல்லும் கழுதைகள், தோட்டத்தைச் சுற்றிப் பார்ப்பதற்காக பராமரிக்கப்படும் குதிரைகள், சுதந்திரமாக மேய்ந்துக் கொண்டிருக்கும் செம்மறி, ஜமுனாபாரி உள்ளிட்ட வகைவகையான ஆட்டக் கூட்டம், பழத்தோட்டத்தில் உள்ள களைகளை காலி செய்து கொண்டிருக்கும் வாத்துக்கள், வான்கோழிகள் மற்றும் நாட்டுக் கோழிகள், இயற்கை இடுபொருட்களைத் தருவதற்கென்றே வளர்க்கப்படும் காங்கிரேஜ், தார்பாக்கர் உள்ளிட்ட நாட்டுஇன மாடுகள்.. என திரும்பிய பக்கமெல்லாம் ஆச்சரியம்தான்!

**மாட்டு எருமட்டும்தான் மாங்கன்னுக்கு!**

இது, எங்க குடும்பத்துக்குச் சொந்தமான பண்ணை. 12 வருடத்தில் இந்த அளவிற்கு இதை நாங்க வளர்த்தெடுத்திருக்கோம். ஐ.டி.ஐ படிச்சிட்டு, ஆட்டோ மொபைல் வேலை செய்துகிட்டு இருந்தேன். அதில் வருமானம் இருந்தாலும், போதுமான அளவிற்க்கு மனநிறைவு கிடைக்கவில்லை. அந்த நேரத்தில்தான் இந்த நிலத்தை வாங்கினோம். நிலத்தை யார் பராமரிப்பது என்ற கேள்வி வந்தப்பொழுது நானே பொறுப்பை ஏத்துக்கிட்டேன். கல்லும், கரடுமாக் கிடந்த இடத்தை சரி செய்து, மாஞ்செடி நட்டு வைத்தோம். ஆரம்பத்தில் குடத்தில் தண்ணீர் எடுத்து ஊற்றிதான் மாங்கன்னை காப்பத்தினோம். செடி நடும்போது, மாட்டு எரு மட்டும் போட்டா போதும்னு சொன்னாங்க. அதைத்தான் செய்தோம். ஆனால், இயற்கை விவசாயம் என்பது பற்றி எதுவுமே அப்பொழுது எங்களுக்குத் தெரியாது.

**நோய்களுக்கு காரணம் ரசாயனம்!**

எங்களுக்கு ஒரு அண்ணன் உண்டு. தோட்ட வேலைகள் ஒரு பக்கம் நடந்துகிட்டிருக்க.. அவருக்கு திடீர்னு உடம்பு சரியில்லாமல் போச்ச. ஆஸ்பத்திரியில் சேர்த்தப்ப.. அது வேலை செய்யல, இது வேலை செய்யலைனு சொல்லி எல்லாத்துக்கும் ட்ரீட்மென்ட் கொடுத்தாங்க. ஆனால், அவரைக் காப்பாத்த முடியல. ஆஸ்பத்திரியில் இருந்தப்ப இப்ப எல்லாம் இப்படி கண்ட கண்ட நோய்ங்க ஆட்டிப் படைக்குது. இதற்கெல்லாம் காரணமே விவசாயத்தில் பயன்படுத்தும் ரசாயன உரம், பூச்சிக் கொல்லிங்கதான்னு டாக்டருங்க பேசிக்கிட்டதைக் கேட்டேன்.

அதற்குப் பிறகுதான், ஏற்கெனவே நாம ரசாயனம் எதையும் பயன்படுத்தல.. இனியும் துளிகூட ரசாயனத்தைத் தோட்டத்தில் போட்டுடக்கூடாது என்று முடிவு செய்தேன். அத்தோட இயற்கை வவிசாயத்தைப் பற்றி தகவல்களைச் சேகரிக்க ஆரம்பித்தேன். இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார், வேளாண் வித்தகர், சுபாஷ் பாலேக்கர்.. போன்றவங்களோட பயிற்சி வகுப்புகளில் கலந்துகிட்டேன். இயற்கையை எப்படி அணுகறதுங்கற வித்தையை இந்த இரண்டு

பேருகிட்டதான் முழுதாக கற்றுக் கொண்டேன் என்று சொல்லும் பாரதி, தற்போது தன்னுடைய தோட்டத்தில் மாமரங்களுக்கு இடுபொருடகள் என்று எதையுமே கொடுப்பதில்லை.

மாட்டு எரு, பஞ்சகவ்யா, ஜீவாமிர்தம்னு எல்லாத்தையும் இரண்டு வருடத்திற்க்கு முன்ன வரைக்கம் பயன்படுத்திக்கிட்டு இருந்தேன். இப்போ எதையுமே பயன்படுத்துவது இல்லை. அதற்க்கு காரணம் திருவண்ணாமலையில் நடந்த ஜீரோ பட்ஜெட் பயிற்சி வகுப்புதான். சுபாஷ் பாலேக்கர் ஐயாகிட்ட, என் பண்ணையோட போட்டோக்களைக் காட்டினேன். ரொம்ப நல்லா இருக்கு, மண்ணில் நுண்ணுயிரும், மண்புழுவும் வளர்ந்துட்ட எந்த இடுபொருளம் கொடுக்க வேணாம். நீங்க சொல்றத வைத்து பார்க்கும்பொழுது ஏறத்தாழ உங்களோட பண்ணையில் நுண்ணுயிர்களும்,மண்புழுவும் வேலை செய்ய ஆரம்பித்திருக்கும் என சொன்னார். அவர் சொன்ன மாதிரியே என்னோட பண்ணயையில் எந்த இடத்தில் தோண்டினாலும் மண்புழுவைப் பார்க்க முடியும். அதனாலேயே இடுபொருள்னு எதையும் கொடுக்கத் தேவையில்லை என்ற முடிவுக்கு வந்தேன் என்ற பாரதி.. இதோ பாருங்க மண்புழுங்க, தோட்டம் முழுக்க உரத்தை தள்ளியிருப்பதை. இந்த மண்புழுங்க தோட்டம் முழுக்க இப்படி வேலை செய்வதால்.. பூமி முழுக்க ஓட்டை ஓட்டையா இருக்கு. இதனால் வேர்களுக்கு அப்பப்ப காற்றுப் போவதுடன் மழை பெய்தால் சொட்டு தண்ணீர் கூட வீணாகாமல் நிலத்தில் இறங்கி விடுகிறது. இப்படி இயற்கை உரத்தையும் கொடுத்து, மழைநீரையும் அறுவடை செய்வதற்க்கு உதவியாக இருக்கும் மண்புழுவை குலத்தெய்வம் கணக்காக நாங்க கும்பிடுகிறோம்.

அருகில் இருந்த மா மரத்தில் பழங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. அதில் செந்தூர மாம்பழததைப் பறித்து சுவைக்கச் சொன்னார். அலாதியான அந்தச் சுவையும் மணமும் வீட்டுக்குப் பின்புறத்தில், யாருமே உரம் போடாமல் வளர்ந்திருந்த மாமரத்தில், சின்ன வயதில் ஏறிப் பறித்துச் சாப்பிட்ட பழத்தின் நினைவு வந்து மோதியது

இயற்கை உரமோ, பூச்சிவிரட்டியோ.. எதுவும் இந்த வருஷம் கொடுக்கவில்லை. ஆனால், விளைச்சல் மட்டும் நிறைவா இருக்கு. ‘ஜப்பான் இயற்கை வேளாண் விஞ்ஞானி’ மசானோபு ஃபுகோக்கா, இயற்கை விவசாயம் என்றால்.. விதைக்கணும், அறுக்கணும். இதைத் தவிர வேற எந்தப் பராமரிப்பும் செய்யக் கூடாது என்று தான் சொல்லியிருக்கிறார். அதைத்தான் உழவு செய்யாத வேளாண்மை என்று (டூ நத்திங் ஃபார்ம்) சொல்வாங்க. எங்க பண்ணையில் இப்ப அறுவடை மட்டும் தான் செய்கிறோம். சொன்னா நம்பமாட்டீங்க.. இந்த நூற்றுக்கணக்கான ஏக்கர் பண்ணையில், இரண்டு பேர் மட்டும் தான் வேலை செய்றோம். ஒண்ணு நான்,

இரண்டாவது பண்ணை மேனேஜர் ஒட்டமொத்த பண்ணையும் இயற்கையோட கட்டுபாட்டில் வந்தது தான் இதற்க்கு காரணம். சில்லரை வேலைகளை செய்ய குதிரை, கழுதை, ஒட்டகம்.. உதவி செய்துங்க. ஆனால் எங்களுக்கே இங்க பெரிசா எந்த வேலையும் இல்லை. பழ சீஸனில் மட்டும் ஒன்று இரண்டு ஆட்களைக் கூட சேர்த்துக்குவோம்.

**களையெடுக்கும் ஆடுகள்**

கோடைக் காலத்தில் மரங்க வாடாமல் இருக்கணும். அதற்காக எல்லா மரத்துக்கும் சொட்டுநீர் பாசனம் போட்டிருக்கோம். மா மரத்திற்க்கு பக்கத்தில் வளரும் களையைக் கட்டப்படுத்த உழவு ஓட்டிப்போடுங்க என்று சிலர் சொல்றாங்க. ஆனால், இங்க வளர்ற 150 ஆடுகளே களைளையெல்லாம் சாப்பிடுவது மட்டுமில்லாமல் சத்தான உரத்தையும் மரங்களைச் சுத்தி போடுதுங்க. இரண்டு வருஷத்துக்கு முன்ன வாங்கின 40 ஆடுகள்தான், இப்போ 150 உருப்படியா பெருகி நிற்கிறது.

காங்கிரேஜ். தார்பார்க்கர்னு நாட்டுரக மாடுங்களும் நான்கைந்து இருக்கிறது. ஜீவாமிர்தம், பஞ்சகவ்யா இதற்காகத்தான் அதையெல்லாம் வாங்கிட்டு வந்தேன். இப்ப அந்தத் தேவையும் பூர்த்தியானதால் மாடுங்க சும்மா நிற்குதுங்க. அதுங்ககிட்டேயிருந்து பாலையும் கறப்பதில்லை, எல்லாவற்றையும் கன்னுக்குட்டிங்களே குடிச்சிடும். அதனால்தான் இந்த கன்னுக்குட்டிங்க எல்லாம் தெம்பா இருக்குது.

ஏக்கருக்கு 30 அடிக்கு 30 அடி இடைவெளியில் 40 மரங்கள் வைத்திருக்கிறோம். பங்கனப்பள்ளி, அல்போன்ஸா, செந்தூரா, ஜவாரி, மல்கோவா என்று விதம்விதமான ரகங்கள் நடவு செய்திருக்கிறோம். சராசரியாக ஒரு மரத்திற்கு 150 கிலோ மகசூல் கிடைக்கும். 10 மரத்தில் மகசூல் முன்ன, பின்ன இருந்தாலும்.. சராசரியா ஏக்கருக்கு 4,500 கிலோ கிடைக்கும். இருப்பதிலேயே விலை குறைவான செந்தூரா ரகம் கிலோ 30 ரூபாய், பங்கனபள்ளி கிலோ 60 ரூபாய், அல்போன்சா கிலோ 70 ரூபாய் என்று விற்பனையாகிறது. குறைந்தபட்சம் கிலோ 30 ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும் ஏக்கருக்கு 1,35,000 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது. இதை வருமானம் என்று சொல்வதைக் காட்டிலும், லாபம் என்று தான் சொல்ல வேண்டும். ஏனெனில் ஆரம்பக் கட்டத்தில் நடவு, சொட்டுநீர் இதற்காக செய்ததைத் தவிர, இந்த 12 வருடத்தில் பெரிதாக ஒரு செலவும் இல்லை.

இப்படி, எந்த சிரமமும் இல்லாமல் லாபம் மட்டுமே கிடைப்பதுடன், நஞ்சு இல்லாத விளைபொருளும் கிடைக்கும் பொழுது ஏன் எல்லா விவசாயிகளும் இயற்கை விவசாயத்திற்கு

மாறக்கூடாது என்றுக் கேட்டுவிட்டு, என்னோட அனுபவத்தில் தெரிஞ்சுக்கிட்ட இயற்கை விவசாயத் தொழில்நுட்பததை மற்றவங்களுக்கும் சொல்லிக் கொடுக்கத் தயாராக இருக்கேன். பண்ணையிலேயே வந்து தங்கி எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு போகலாம். சாப்பாட்டுக்கும், தங்குவதற்கும் கூட பணம் வேண்டாம். இயற்கை அன்னை எனக்கு போதுமான செல்வத்தை அள்ளிக் கொடுக்கிறாள்.. அதிலிருந்து கொஞ்சமாவது, மத்த விவசாயிகளுக்கும் கொடுப்பதுதானே நியாயம் என்றார்.

பரந்து விரிந்து கிடக்கும், இந்தப் பண்ணையை நிர்வகிக்கும் பாரதி.. ஒரு மாற்றுத் திறனாளி. போலியாவால் ஒரு கால் பாதிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், அதை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளாமல், தோட்டத்திற்க்குள் துள்ளல் நடைபோட்டு சாதித்திருக்கும் பாரதியை பார்க்கும் பொழுது,விண்ணை முட்டுகிறது வியப்பு.

**தொடர்புக்கு**

பாரதி, அலைபேசி : 93805-33376

---

**ஆதாரம்:** பசுமை விகடன் வெளியீடு 25.06.11 www.vikatan.com